**செ.வெ.எண்:759** **நாள்: 09.11.2019**

**ஆய்வக தொழில்நுட்ப வல்லுனர் பணிக்காலியிடத்திற்கு பதிவுதாரர்கள் மாநில உத்தேச பதிவுமூப்பின்படி பரிந்துரைக்கப்பட உள்ளனர்.**

**மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

---

ஆய்வக தொழில்நுட்ப வல்லுனர் பணிக்காலியிடத்திற்கு பதிவுதாரர்கள் மாநில உத்தேச பதிவுமூப்பின்படி பரிந்துரைக்கப்பட உள்ளனர். இதுகுறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது.

மருத்துவப்பணியாளர் தேர்வு வாரியத்தால் அறிவிக்கப்பட்டுள்ள ஆய்வக தொழில்நுட்ப வல்லுனர் (Laboratory Technician Grade-III) பணிக்காலியிடத்திற்கு பதிவுதாரர்கள் மாநில உத்தேச பதிவுமூப்பின்படி பரிந்துரைக்கப்பட உள்ளனர். இப்பணிக்காலியிடத்திற்கு 12ம் வகுப்பு தேர்ச்சியுடன் அரசு அங்கீகாரம் பெற்ற மருத்துவ நிறுவனத்தில் ஒரு வருட ஆய்வக தொழில்நுட்ப வல்லுனர் சான்று பெற்றிருக்க வேண்டும்.

01.07.2019 அன்று உள்ளபடி ஆதிதிராவிட வகுப்பினர், பழங்குடி வகுப்பினர் மற்றும் ஆதிதிராவிட அருந்ததியின வகுப்பினர், மிகவும் பின்தங்கிய வகுப்பினர், பின்தங்கிய வகுப்பினர் முஸ்லீம், பின்தங்கிய வகுப்பினருக்கு உச்ச வயது வரம்பு இல்லை, முற்பட்ட வகுப்பினர் 30 வயதிற்கு மிகாதிருக்க வேண்டும்.

மேற்காணும் பணிக்காலியிடத்திற்கான கல்வித் தகுதியும், வயது வரம்பும், உள்ள புதுக்கோட்டை மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலக பதிவுதாரர்கள் தங்களது அனைத்து அசல் கல்விச் சான்றுகள், ஆய்வக தொழில்நுட்ப வல்லுனர் சான்று, சாதிச்சான்று, முன்னுரிமைப் பதிவு தொடர்பான சான்று, மற்றும் வேலைவாய்ப்பு அலுவலக பதிவு அடையாள அட்டையுடனும் 13.11.2019 ம் தேதிக்குள் புதுக்கோட்டை மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தை நேரில் அணுகி தங்கள் பெயர் மற்றும் பதிவு விவரங்களை சரிபார்த்துக் கொள்ளலாம். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை.**